Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.192/2021** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW9** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ஜீவரத்தினம் |
| Father/Husband Name | : | அருள்மாது |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.11.2025.

(எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது ஏர்வாடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.07.2021ம் ஆண்டு நான் மண்டபம் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருக்கும்போது மண்டபம் காவல் நிலைய குற்ற எண்.187/2019 சட்டப்பிரிவுகள் 489ஏ, 489பி, 489சி வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கை முதல் விசாரணை செய்த ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் மறுபடியும் விசாரணை செய்து அவர் முந்தைய காவல் ஆய்வாளரிடம் கூறியதுபோல் என்னிடம் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு இவ்வழக்கில் பயன்படுத்திய HP Inject Printer ஐ சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி இருந்ததை ஆய்வறிக்கை 03.07.2021ம் தேதி பெற்று ஆய்வறிக்கை வழங்கிய திரு.லெட்சுமி நாராயணன்,

சென்னை தடய அறிவியல் அதிகாரி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய ஆய்வறிக்கை **அ.சா.ஆ.11**. பின்பு அந்த அலுவலுக்கு பயன்படுத்திய காவலர் 2036 மன்சூர் அலி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இவ்வழக்கின் 1ம்எதிரி அகமது கபீர் என்பவர் மீது பிரிவு 489 ஏ, 489 சி, 489 டி இதசவின் படியும், மற்றொரு எதிரியான முரளிதரன் என்ற அருண் என்பவர் மீது பிரிவு 489 பி, 489 சி இதசவின் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவரிடம் அனுப்பி வைத்தேன்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1ம் எதிரியிடமிருந்து பிரிண்டிங் மிசினை தவிர வேறு எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் கைப்பற்றிய பிரிண்டிங் மிசின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோது செயல்படாத நிலையில் இருந்ததாக தடயவியல் அறிவியில் அலுவலர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. தடய அறிவியல் அலுவலர் கொடுத்த ஆய்வு அறிக்கையில் பிரிண்டிங் மிசின் செயல்படும் நிலையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சாட்சிகள் மணிகண்டன், சிராஜீதீன், அன்புசெல்வம், கமலக்கண்ணன், ஜெயக்குமார் ஆகியோர்கள் எங்கள் காவல்நிலையத்தில் பணிபுரிந்த காவலர்கள் என்றால் சரிதான். சாட்சிகள் தினேஷ், அன்பு, வேல் ஆகியோர்களை 01.07.2021ம் தேதி கணக்கம்பாளையத்தில் வைத்து விசாரணை செய்தேன். 1ம்எதிரி தங்கியிருந்த வீட்டை நான் பார்வையிட்டேனா என்றால் ஞாபகமில்லை. 1ம்எதிரி தங்கிருயிருந்த வீடு டார்ச் வீடா, ஓட்டு வீடா என்றால் ஞாபகமில்லை. முதல் விசாரணையில் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முறையாக புலன்விசாரணை செய்யாமல் 1ம்எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், 1ம்எதிரிக்கும எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

2ம் எதிரி கருப்பு நிற பையில் கள்ளநோட்டுக்களை வைத்திருந்ததாக சொல்லப்படும் பையை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு 2ம்எதிரி கள்ளநோட்டு வைத்திருப்பதாக தகவல் கிடைத்த நேரத்தில் எந்தெந்த காவலர்கள் காவல் நிலையத்தில் பணியில் இருந்தார்கள் என்றால் பணிபதிவேட்டை

பார்த்தால் சொல்ல முடியும். பணிப்பதிவேட்டை ஒரு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டு பின்னிட்டு காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 2ம்எதிரி கள்ள நோட்டு வைத்திருப்பதாக ஏற்கனவே தெரிந்து காவல் நிலையத்திலிருந்து மடிக்கணினி எடுத்து செல்லப்பட்டதா என்றால் இல்லை, எப்பொழுதும் வெளியே செல்லும்போது மடிக்கணினியும் எடுத்து செல்வோம். ஒப்புதல் வாக்குமூலததை பதிவு செய்த காவல் அதிகாரிக்கு மடிக்கணினியை இயக்கவும், மடிக்கணினியில் தட்டச்சு செய்யவும் தெரியாது என்றால் சரியல்ல. அசா.5 ஆக விசாரிக்கப்பட்டுளள சிராஜீதீன் நீதிமன்ற விசாரணையின்போது 2ம் எதிரி கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டது என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது தவறு. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ள நோட்டுக்கள் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டு அது கள்ளநோட்டுக்கள்தான் என உறுதிபடுத்தப்பட்டதாக அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள தடயஅறிவியல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.5 சிராஜீதீன் கைப்பற்றப்பட்ட நோட்டுக்கள் கள்ளநோட்டுக்கள் என்பதை உறுதிபடுத்துவதற்கு இந்திய ரிசர்வ் வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தாரா என்றால் இல்லை. அ.சா.ஆ–11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அறிக்கை அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ள லெட்சுமிநாராயணன் தானாக தயாரித்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ள தடய அறிவியல் அலுவலர் லெட்சுமி நாராயணன் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கள்ளநோட்டுக்களை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டவில்லை என்றால் எனக்கு தெரியாது. 1, 2 எதிரிகள்கொடுத்ததாக சொல்லப்படும ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் கையால்தான் எழுதப்பட்டது என்றும், அந்த கையெழுத்து பிரதியை தாக்கல்செய்தால்தான் நீதிமன்றத்தில் உள்ள கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் ஒன்றா அல்லதுவெவ்வேறா என்று அறிந்து கொள்ள முடியும் என்று சொன்னால், ஒப்புதல் வாக்குமூலங்கள் கையால் எழுதப்படவில்லை, தட்டச்சுதான் செய்யப்பட்டது. நான் ஒப்புதல் வாக்குமூலங்கள் கையால் எழுதப்படவில்லை என்றும், தட்டச்சு செய்யப்பட்டது என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட நோட்டுக்கள்

ஸ்கேன் செய்து தயார் செய்யப்பட்ட நோட்டுக்கள் அல்ல, கள்ள நோட்டுக்களாகவே அச்சு செய்யப்பட்டவை. 3 வகையான கள்ளநோட்டுக்களும் ஸ்கேன் செய்து தயாரிக்கப்பட்டவையா அல்லது அச்சடிக்கப்பட்டவையா என புலன் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் அச்சடிக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன். HP Inject Printer ல் பிரிண்டரில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. நீதிமன்றத்தில் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ள HP Inject Printer மூலம் கள்ளநோட்டுக்கள் தயார்செய்யப்பட்டிருக்க முடியாது என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு தேசிய புலனாய்வு முகமை சட்டத்தின்படி மாநில உள்துறையிடம் முன் அனுமதி பெற்றுத்தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு நான்செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.